අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி அமைச்சு
Ministry of Education

'ඉසුරුපාය', බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව.
'இசுருபாய', பத்தரமுல்ல, இலங்கை.
'Isurupaya', Battaramulla, Sri Lanka.
+94112785141-50 +94112784846
isurupaya@moe.gov.lk www.moe.gov.lk

මගේ යොමුව / எனது இல. / My Ref. } ED/08/26/05/08/01-V

ඔබේ යොමුව / உமது இல. / Your Ref. }

දිනය / திகதி / Date } 2020.02. 19

**சுற்றுநிருப இலக்கம் 10/2020**

சகல மாகாணக் கல்விச் செயலாளர்களுக்கும்
சகல மாகாணக கல்விப் பணிப்பாளர்களுக்கும்
சகல வலயக் கல்விப் பணிப்பாளர்களுக்கும்
சகல கல்வியியல் கல்லூரி பீடாதிபதிகளுக்கும்
சகல ஆசிரியர் கல்லூரி அதிபர்களுக்கும்
சகல அதிபர்களுக்கும்

**<u>"தேசிய மட்ட பாடசாலை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப வீரர்கள்" சுற்றுப் போட்டி</u>**

2009ம் ஆண்டில் தேசிய மட்டத்தில் நடாத்தப்படும் ஒரேயொரு உத்தியோகபூர்வ தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப சுற்றுப்போட்டியாக ஆரம்பிக்கப்பட்ட "தேசிய மட்ட பாடசாலை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப வீரர்கள்" சுற்றுப்போட்டி தொடர்பாக 2009ம் ஆண்டில் 2009/19 ம் இலக்க சுற்றுநிருபம் மற்றும் 2010 ஆண்டில் 2010/18ம் இலக்க சுற்று நிருபம் மற்றும் 2011ம் ஆண்டில் 2011/05ம் இலக்க சுற்றுநிருபங்கள் வெளியிடப்பட்டுள்ளதுடன் மேற்படி சுற்றுப் போட்டியுடன் தொடர்புடையதாக இதுவரை வெளியிடப்பட்டுள்ள சகல சுற்றுநிருபங்களும் இத்துடன் இரத்துச் செய்யப்படுவதுடன் 2020ம் ஆண்டு தொடக்கம் எதிர்வரும் வருடங்களில் செயற்படும் வண்ணம் இச் சுற்றுநிருபம் அமுல்படுத்தப்படுகின்றது.

02. இப் போட்டியானது தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப பாடத்துடன் தொடர்பாக கல்வி அமைச்சின் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பக் கிளையினால் நடாத்தப்படும் உத்தியோகபூர்வ சுற்றுப் போட்டியென்பதுடன் இலங்கை தகவல் தொழில்நுட்பத் துறைக்கான சபையின் (FITIS) கீழ் இயங்கும் இலங்கை மென்பொருள் உற்பத்தியாளர்களின் சங்கம் (SLASI) மற்றும் இலங்கை கண்ணிச் சமூத்தினால் (CSSL) இதுவரை காலமும் நடாத்தப்பட்ட போட்டிகளும் இப் பிரதான சுற்றுப்போட்டியின் கீழ் நடாத்தப்படுவது இதன் சிறப்புத் தன்மையாகும்.

03. இப் போட்டிகள் தொடர்பாக ஒவ்வொரு தொகுதியினருக்கும் நடாத்தப்படும் சுற்றுப்போட்டிகள் தொடர்பான தொனிப்பொருள் மற்றும் நிபந்தனைகள் அடங்கிய ஆலோசனை நூலொன்று வருடாந்தம் வெளியிடப்படும்.

04. இச் சுற்றுப் போட்டியில் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப பாடத்தினைக் கற்பிக்கும் சகல பாடசாலைகளிலிருந்தும் கலந்து கொள்வது கட்டாயம் என்பதுடன் இது தொடர்பாக அவசியமான நடவடிக்கைகளை மேற்கொள்வது வலயக் கல்வி அலுவலகத்தின் தகவல் தொழில்நுட்ப பாடத்திற்கு பொறுப்பான உதவிக் கல்விப் பணிப்பாளர்/ பிரதிக் கல்விப் பணிப்பாளரின் கடமையாகும்.

என்.எச்.எம் சித்ரானந்த
செயலாளர்
கல்வி அமைச்சு

N.H.M. Chitrananda
Secretary
Ministry of Education
"Isurupaya" Pelawatta,
Battaramulla.

# வழிகாட்டல் நூல்

## தேசிய மட்ட பாடசாலை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப வீரர்கள்” சுற்றுப் போட்டி

**இலக்கம் 10/2020 உடைய சுற்றுநிருபத்தின் விதிமுறைகளுக்கமைய நடைமுறைப்படுத்தப்படும்**

இணைப்பு 01

**(A) தேசிய மட்ட பாடசாலை மென்பொருள் சுற்றுப்போட்டி (NSSC)- இலங்கை கணணிச் சங்கத்தினூடாக (CSSL) நடாத்தப்படும் நிகழ்நிலை (Online) சுற்றுப்போட்டி**

**(A.1) போட்டித் தொகுதி**

இப்போட்டியானது இரண்டு வயதினர் தொகுதி கொண்டதாக நடாத்தப்படும்.

1. முதல் தொகுதி (Group 1) – 6-11 ம் தரத்திலுள்ளோர் ( வயது 10-16 வருடங்கள்)
2. இரண்டாம் தொகுதி (Group 1) – 12-13 ம் தரத்திலுள்ளோர் (வயது 17-19 வருடங்கள்)

**(A.2) இச் சுற்றுப்போட்டியின் தன்மை**

**(A.2.1) ஆரம்ப கட்ட போட்டி**

I. **இது நிகழ்நிலையூடாக (Online) நடாத்தப்படும் போட்டியாகும்.** இது மாகாண அல்லது வலய மட்டத்தில் நடாத்தப்படும். (கணணி மொழிகள் பற்றிய அடிப்படை அறிவு இதனூடாக பரீட்சிக்கப்படும்.)

II. **வலய மட்டத்தில் Online போட்டிகளை வலயத்தின் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப பாடத்திற்கு பொறுப்பான உதவிக் கல்விப் பணிப்பாளர் / பிரதிக் கல்விப் பணிப்பாளர் நடாத்துதல் வேண்டும்.**

III. **இருப்பினும் கிடைக்கப்பெறும் விண்ணப்பப்படிவங்களின் எண்ணிக்கை குறைந்தளவில் காணப்படின் மாகாணக் கல்விப் பணிப்பாளரின் அனுமதியுடன் போட்டியினை மாகாண மட்டத்தில் நடாத்த முடியும் என்பதுடன் அச் செயற்பாடானது மாகாணத்தின் தகவல் தொழில்நுட்ப பாடத்திற்கு பொறுப்பான உதவிக் கல்விப் பணிப்பாளர் / பிரதிக் கல்விப் பணிப்பாளரால் மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.**

**(A.2.2) இறுதிச் சுற்றுப்போட்டி**

I. **மேலே A.2.1 இல் குறிப்பிடப்பட்டுள்ள போட்டியில் பெற்றுக்கொள்ள வேண்டிய குறிப்பிட்ட அளவு புள்ளிகளைப் பெற்ற மாணவர்களுக்கான இறுதிக்கட்ட சுற்றுப்போட்டியானது கல்வி அமைச்சின் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பக் கிளையின் வழிகாட்டலின் கீழ் கொழும்பில் நடைபெறும்.**

II. **இது நிகழ்நிலை (Online) ஊடாக நடாத்தப்படும் போட்டியொன்றாகும். போட்டியில் பங்குபற்றுவோர் கணணி செய்நிரல் (Computer Programme) ஒன்றினை உருவாக்க வேண்டும் என்பதுடன் இதன் மதிப்பீடானது நிகழ்நிலையூடாக(Online) மேற்கொள்ளப்படும். (போட்டியாளர்கள் நிகழ்நிலையூடான (Online) போட்டியில் வழங்கும் விடைகளின் மென்பிரதி ஒன்றினை எடுத்துக்கொள்ளுதல் வேண்டும்.)**

**(A.3) போட்டிக்கான நிபந்தனைகள்**

I. போட்டியில் போட்டித் தொகுதி இரண்டில் ஒரு தொகுதியில் அல்லது இரண்டு தொகுதிகளிலும் பங்குபற்றச் செய்யமுடியும் என்பதுடன் ஒரு பாடசாலையில் இருந்து இப்போட்டிகளில் ஆகக் கூடிய எண்ணிக்கையாக 10 மாணவர்களே பங்குபற்றலாம்.

II. போட்டியில் கலந்து கொள்வதற்காக விண்ணப்பிக்கும் ஒருவர் C/ C++ அல்லது C# அல்லது Java பற்றிய அடிப்படை அறிவினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

**போட்டி தொடர்பாக மேலதிக விபரங்களை அறிந்து கொள்ள**

தலைவர்
இலங்கை கணணி சங்கம் (CSSL)
275/75, பேராசிரியர் ஸ்டென்லி விஜேசுந்தர மாவத்தை
கொழும்பு – 07

தொலைபேசி 011-2592762 / 0114 4713290
தொலை நகல் 011-2508009
மின்னஞ்சல் – info@cssl.lk / admin.exec@cssl.lk
இணையத்தளம் www.cssl.lk

**(A.4) போட்டியில் கலந்து கொள்வதற்காக பதிவு செய்தல் மற்றும் விண்ணப்பிக்கும் முறை**

I. அவ் வருடத்தின் மே மாதம் 30ம் திகதிக்கு முன்னர் உங்களுக்குரிய தொகுதிக்கான நிகழ்நிலை **(Online) விண்ணப்பப்படிவத்தினை கல்வி அமைச்சின் இணையத்தளமான (www.moe.gov.lk) இற்குள் பிரவேசித்து பூரணப்படுத்துதல்** வேண்டும். நிகழ்நிலை (Online) ஊடாக விண்ணப்பிப்பவர்கள் போட்டியில் கலந்து கொள்வதற்காக வரும் சந்தர்ப்பத்தில் பாடசாலையின் அதிபரால் உறுதிப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவத்தினை எழுத்து மூலம் சமர்ப்பித்தல் வேண்டும். இவ் விண்ணப்பப்படிவத்தினையும் (www.moe.gov.lk) எனும் இணையத்தளத்திலிருந்து பெற்றுக்கொள்ளமுடியும்.

**அல்லது**

II. அவ் வருடத்தின் மே மாதம் 30ம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடிய வகையில் உரிய தொகுதிக்கான "**REGISTRATION - CSSL**" எனும் விண்ணப்படிவத்தினை பூரணப்படுத்தி அதிபரின் பரிந்துரையுடன் பதிவுத் தபாலில் கீழே குறிப்பிடப்பட்ட முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.

உங்களால் அனுப்பப்படும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "**Registration - CSSL**" என குறிப்பிடுதல் வேண்டும்.

**போட்டியில் கலந்துகொள்வதற்காக பதிவு செய்வதற்கும் ஆக்கங்களை அனுப்புவதற்கும் உபயோகிக்க வேண்டிய முகவரி**

**பணிப்பாளர்**
**தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பக் கிளை**
**கல்வி அமைச்சு**
**"இசுருபாய"**
**பத்தரமுல்ல**

**இணைப்பு 02**

**(B) இளம் கணணி விஞ்ஞானிகளுக்கான சுற்றுப்போட்டி(YCS) – இலங்கை தகவல் தொழில்நுட்ப தொழிற்றுறைச் சபை(FITIS) ஊடாக நடாத்தப்படும் சுற்றுப்போட்டி**

**(B.1) போட்டித் தொகுதி**

இப்போட்டியானது இரண்டு துறைகளில் மூன்று வயதினர் தொகுதியினருக்கு நடாத்தப்படும்.

| இல | துறை | வயதினர்த் தொகுதி |
|---|---|---|
| 01 | • அடிப்படை வன் பொருட்களை இணையத்துடன் தொடர்பு படுத்தும் IOT (Internet of Things) ஆக்கங்கள்<br>• செயற்கை அறிவுடன் தொடர்புடைய (Artificial Intelligence) ஆக்கங்கள்<br>• ரோபோ தொழில்நுட்பம் சார் (Robotics) ஆக்கங்கள்<br>• திரள் தரவு பகுப்பாய்வுடன் (Big Data Analytics) தொடர்பான ஆக்கங்கள் | கனிஷ்ட 1ம் பிரிவு<br>தரம் 6-8( வயது 10-13 வருடங்கள்)<br><br>கனிஷ்ட 2ம் பிரிவு<br>தரம் 9-11 ( வயது 14-16 வருடங்கள்)<br><br>சிரேஷ்ட பிரிவு<br>தரம் 12-13 (வயது 17-20 வருடங்கள்) |
| 02 | • இணையத்தளங்கள் (Websites)ஆக்கம்<br>• கையடக்கத் தொலைபேசிகளுக்கான செயலிகள் (Mobile App) ஆக்கம்<br>• கணணி செயலிகள் (Desktop App) ஆக்கம்<br>• கணணி விளையாட்டு செயலிகளின் (Computer Game Application) ஆக்கம் | கனிஷ்ட 1ம் பிரிவு<br>தரம் 6-8( வயது 10-13 வருடங்கள்)<br><br>கனிஷ்ட 2ம் பிரிவு<br>தரம் 9-11 ( வயது 14-16 வருடங்கள்)<br><br>சிரேஷ்ட பிரிவு<br>தரம் 12-13 (வயது 17-20 வருடங்கள்) |

**(B.2) போட்டிக்கான நிபந்தனைகள்**

I. தனியாளின் ஆக்கம் அல்லது குழுவொன்றின் ஆக்கமாக இருத்தல் வேண்டும். ஆக்கம் கட்டாயமாக சொந்த ஆக்கமாக இருத்தல் வேண்டும். ( குழுவொன்றில் இருக்கக் கூடிய ஆகக் கூடிய மாணவர்களின் எண்ணிக்கை 3 ஆகும்).

II. இவ் ஆக்கங்கள் யாவும் சிங்களம்/ தமிழ் அல்லது ஆங்கில மொழியில் அமைந்திருத்தல் வேண்டும்.

III. முன்வைக்கப்படும் ஆக்கமானது தொனிபொருளிற்கமைவானதாக இருத்தல் வேண்டும் என்பதுடன் இதனூடாக வழங்கப்படும் கருத்து பாடசாலை முறைமையில் அல்லது சர்வதேச மட்டத்தில் உபயோகப்படுத்தக்கூடிய சிறந்த அர்த்தம் கொண்டதாக இருத்தல் வேண்டும்.

IV. ஒரு ஆக்கத்தினை மாத்திரமே முன்வைத்தல் வேண்டும்.

V. போட்டியில் பதிவு செய்தல் மற்றும் ஆக்கங்களை முன்வைக்கும் போது **B.3** இல் குறிப்பிடப்பட்டுள்ள ஆலோசனைகளை பின்பற்றுதல் வேண்டும்.

VI. அவ் அப் போட்டிகளுக்குரிய ஆலோசனைகளுக்கமைய அமைக்கப்பட்ட இறுதி ஆக்கத்தினை இரண்டு மென் பிரதிகளாக சமர்ப்பித்தல் வேண்டும். (இரண்டு இறுவட்டுக்கள்) ஆக்கத்துடன் அதனை செயற்படுத்துவதற்கான படிமுறைகள் மற்றும் ஆலோசனைகளைக் கொண்ட குறிப்பொன்றினை எமது வழங்குதல் வேண்டும். இவ் ஆக்கத்தினை செயற்படுத்துவதற்கு உபயோகிக்க வேண்டிய அனைத்து மென்பொருள்கள் பற்றிய விபரங்களையும் குறிப்பில் உள்ளடக்க வேண்டும் என்பதுடன் யாதேனும் விசேட மென்பொருட்கள் இருப்பின் அவற்றையும் (Service Pack/ Drivers/ Correct Software Versions, etc...) இறுவட்டில் உள்ளடக்க வேண்டும். வன்பொருட்கள் மற்றும் மென்பொருட்கள் தொடர்புபடும் ஆக்கங்களை காணொளிப்படுத்தி சகல விபரங்களுடனும் இதில் உள்ளடக்குதல் வேண்டும்.

VII. அனைத்து செயற்றிட்டங்களும் கீழே குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களிற்கேற்ப விசாரிக்கப்படும்

- தனித்துவத் தன்மை
- கருத்தினை முன்வைத்தல்
- செயற்பாடு மற்றும் குணாம்சங்கள்
- தரம்
- முன்வைப்பு

**மேலதிக விபரங்களுக்கு**

முகாமையாளர்
இலங்கை தகவல் தொடர்பாடல் தொழிற்றுறைச் சபை
4ம் மாடி, இல. 344
காலி வீதி
கொழும்பு 03.

தொ.பே – 011- 2577103
தொலை நகல் – arshani@fitis.lk
இணையத்தளம் – www.fitis.lk

**(B.3) பதிவு செய்வதற்கும் ஆக்கங்களை முன்வைப்பதற்கும்**

| போட்டியில் பதிவு செய்து கொள்வதற்கு | ஆக்கங்களை முன்வைப்பதற்கு |
|---|---|
| 1. அவ் வருடத்தின் மே மாதம் 30ம் திகதிக்கு முன்னர் உங்களுக்குரிய தொகுதிக்கான நிகழ்நிலை (Online) விண்ணப்பப்படிவத்தினை கல்வி அமைச்சின் இணையத்தளமான (www.moe.gov.lk) இற்குள் பிரவேசித்து பூரணப்படுத்துதல் வேண்டும். நிகழ்நிலை (Online) ஊடாக விண்ணப்பிப்பவர்கள் போட்டியில் கலந்து கொள்வதற்காக வரும் சந்தர்ப்பத்தில் பாடசாலையின் அதிபரால் உறுதிப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவத்தினை எழுத்து மூலம் சமர்ப்பித்தல் வேண்டும். இவ் விண்ணப்பப்படிவத்தினையும் (www.moe.gov.lk) எனும் இணையத்தளத்திலிருந்து பெற்றுக்கொள்ளமுடியும்.<br><br>**அல்லது**<br><br>2. அவ் வருடத்தின் மே மாதம் 30ம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடிய வகையில் உங்களுக்குரிய தொகுதிக்கான "REGISTRATION-YCS (Field 1)" விண்ணப்பப் படிவம் அல்லது REGISTRATION-YCS (Field 2) விண்ணப்பப் படிவத்தினை பூரணப்படுத்தி அதிபரின் பரிந்துரையுடன் பதிவுத் தபாலில் கீழே குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும். | அவ் வருடத்தின் ஜூன் மாதம் 30ம் திகதிக்கு முன்னர் கிடக்கக் கூடிய வகையில் பூரணப்படுத்தப்பட்ட ஆக்கத்தினை இறுவட்டுக்களில் மாத்திரம் இட்டு இரண்டு மென்பிரதிகளாக உங்களுக்குரிய தொகுதிக்கமைய "ENTRY SUBMISSION FORM – YCS (Field1)" விண்ணப்பப் படிவத்தினை அல்லது "ENTRY SUBMISSION FORM – YCS (Field2)" எனும் விண்ணப்பப் படிவத்தினை பூரணப்படுத்தி அதிபரின் பரிந்துரையுடன் பதிவுத்தபாலில் கீழே குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும். |
| உங்களால் அனுப்பப்படும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் YCS(Field 1) அல்லது YCS (Field 2) என உங்களுக்குரிய போட்டித் தொகுதி மற்றும் மாகாணத்தினைக் குறிப்பிடுதல் வேண்டும் | |

போட்டியில் கலந்துகொள்வதற்காக பதிவு செய்வதற்கும் ஆக்கங்களை அனுப்புவதற்கும் உபயோகிக்க வேண்டிய முகவரி

பணிப்பாளர்
தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பக் கிளை
கல்வி அமைச்சு
"இசுருபாய"
பத்தரமுல்ல

**(C) ஆசிரியர்கள் மற்றும் ஆசிரிய மாணவர்களுக்கான "ஆக்கபூர்வமான ஆசிரியர்கள்" சுற்றுப்போட்டி – இது கல்வி அமைச்சினூடாக நடாத்தப்படும் சுற்றுப்போட்டியாகும்**

இப்போட்டிக்கு அரச பாடாசாலைகள் மற்றும் அரச உதவி பெறும் தனியார் பாடசாலைகளில் கடமை புரியும் ஆசிரியர்கள் மற்றும் கல்வியியல் கல்லூரிகளில் கற்கும் ஆசிரிய மாணவர்களும் விண்ணப்பிக்கலாம்.

**(C.1) ஆசிரியர்களுக்கான "ஆக்கபூர்வமான ஆசிரியர்கள்" போட்டி**

| **தொகுதி** | **ஆக்கத்தினை முன்வைக்கக் கூடிய துறைகள்** |
|---|---|
| திறந்த | • அடிப்படை வன் பொருட்களை இணையத்துடன் தொடர்பு படுத்தும் IOT (Internet of Things) ஆக்கங்கள்<br>• செயற்கை அறிவுடன் தொடர்புடைய (Artificial Intelligence) ஆக்கங்கள்<br>• ரோபோ தொழில்நுட்பம் சார் (Robotics) ஆக்கங்கள்<br>• இணையத்தளங்கள் (Websites)ஆக்கம்<br>• கையடக்கத் தொலைபேசிகளுக்கான செயலிகள் (Mobile App) ஆக்கம்<br>• கணணி செயலிகள் (Desktop App) ஆக்கம் |

**(C.2) கல்வியியல் கல்லூரி ஆசிரிய மாணவர்களுக்கான "ஆக்கபூர்வமான ஆசிரியர்கள்" போட்டி**

| **தொகுதி** | **ஆக்கத்தினை முன்வைக்கக் கூடிய துறைகள்** |
|---|---|
| திறந்த | • அடிப்படை வன் பொருட்களை இணையத்துடன் தொடர்பு படுத்தும் IOT (Internet of Things) ஆக்கங்கள்<br>• செயற்கை அறிவுடன் தொடர்புடைய (Artificial Intelligence) ஆக்கங்கள்<br>• ரோபோ தொழில்நுட்பம் சார் (Robotics) ஆக்கங்கள்<br>• இணையத்தளங்கள் (Websites)ஆக்கம்<br>• கையடக்கத் தொலைபேசிகளுக்கான செயலிகள் (Mobile App) ஆக்கம்<br>• கணணி செயலிகள் (Desktop App) ஆக்கம் |

**(C.3) போட்டி நிபந்தனைகள்**

I. தனியாள் ஆக்கமாக இருத்தல் வேண்டும். ஆக்கமானது கட்டாயமாக சொந்த ஆக்கமாக இருத்தல் வேண்டும்.

II. இவ் ஆக்கங்கள் யாவும் சிங்களம்/ தமிழ் அல்லது ஆங்கில மொழியில் அமைந்திருத்தல் வேண்டும்.

III. முன்வைக்கப்படும் ஆக்கமானது தொனிபொருளிற்கமைவாக இருத்தல் வேண்டும் என்பதுடன் இதனூடாக வழங்கப்படும் கருத்து பாடசாலை முறைமையில் உபயோகப்படுத்தக்கூடிய சிறந்த அர்த்தம் கொண்டதாக இருத்தல் வேண்டும்.

IV. ஒரு ஆக்கத்தினை மாத்திரமே முன்வைத்தல் வேண்டும்.

V. போட்டியில் பதிவு செய்தல் மற்றும் ஆக்கங்களை முன்வைக்கும் போது கீழே குறிப்பிடப்பட்டுள்ள ஆலோசனைகளை பின்பற்றுதல் வேண்டும்.

VIII. அவ் அப் போட்டிகளுக்குரிய ஆலோசனைகளுக்கமைய பூரணப்படுத்தப்பட்ட ஆக்கத்தினை செயற்படுத்துவதற்குத் தேவைப்படும் சகல மென்பொருட்களின் விபரங்களும் ஆலோசனைக் குறிப்பொன்றினூடாக முன்வைக்கப்படுதல் வேண்டும் என்பதுடன் விசேட மென்பொருட்கள் ஏதும் இருப்பின் அவற்றினையும் வழங்குதல் வேண்டும். இறுதி ஆக்கத்தினை இரண்டு மென் பிரதிகளாக ( இரண்டு இறுவட்டுக்களில்) சமர்ப்பித்தல் வேண்டும். வன்பொருட்கள் மற்றும் மென்பொருட்கள் தொடர்புபடும் ஆக்கங்களை காணொளிப்படுத்தி சகல விபரங்களுடனும் இதில் உள்ளடக்குதல் வேண்டும்.

**மேலதிக விபரங்களுக்கு**

**பணிப்பாளர்**
**தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பக் கிளை**
**கல்வி அமைச்சு**
**"இசுருபாய"**
**பத்தரமுல்ல**

தொ.பே. – 011-2785821
மின்னஞ்சல் ictchamps.2020@moe.gov.lk

தொலைநகல் – 011-2785821
இணையத்தளம் – www.moe.gov.lk

**(C.4) பதிவு செய்வதற்கும் ஆக்கங்களை முன்வைப்பதற்கும்**

| **போட்டியில் பதிவு செய்து கொள்வதற்கு** | **உருவாக்கங்களை முன்வைப்பதற்கு** |
|---|---|
| 1. அவ் வருடத்தின் மே மாதம் 30ம் திகதிக்கு முன்னர் உங்களுக்குரிய தொகுதிக்கான நிகழ்நிலை (Online) விண்ணப்பப்படிவத்தினை கல்வி அமைச்சின் இணையத்தளமான (www.moe.gov.lk) இற்குள் பிரவேசித்து பூரணப்படுத்துதல் வேண்டும். நிகழ்நிலை (Online) ஊடாக விண்ணப்பிப்பவர்கள் போட்டியில் கலந்து கொள்வதற்காக வரும் சந்தர்ப்பத்தில் பாடசாலையின் அதிபரால் உறுதிப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவத்தினை எழுத்து மூலம் சமர்ப்பித்தல் வேண்டும். இவ் விண்ணப்பப்படிவத்தினையும் (www.moe.gov.lk) எனும் இணையத்தளத்திலிருந்து பெற்றுக்கொள்ளமுடியும்.<br><br>**அல்லது**<br><br>2. அவ் வருடத்தின் மே மாதம் 30ம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடிய வகையில் உங்களுக்குரிய தொகுதிக்கான "REGISTRATION-TEACHERS (T)" விண்ணப்பப் படிவம் அல்லது REGISTRATION-TEACHERS (T/T) விண்ணப்பப் படிவத்தினை பூரணப்படுத்தி அதிபரின் பரிந்த்துரையுடன் பதிவுத் தபாலில் கீழே குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும். | அவ் வருடத்தின் ஜூன் மாதம் 30ம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடிய வகையில் பூரணப்படுத்தப்பட்ட ஆக்கத்தினை இறுவட்டுக்களில் மாத்திரம் இட்டு இரண்டு மென்பிரதிகளாக உங்களுக்குரிய தொகுதிக்கமைய "ENTRY SUBMISSION FORM – TEACHERS(T)" விண்ணப்பப் படிவத்தினை அல்லது "ENTRY SUBMISSION FORM – TEACHERS (T/T)" எனும் விண்ணப்பப் படிவத்தினை பூரணப்படுத்தி அதிபரின் பரிந்துரையுடன் பதிவுத்தபாலில் கீழே குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும். |
| உங்களால் அனுப்பப்படும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் TEACHERS (T) அல்லது TEACHERS(T/T) என உங்களுக்குரிய போட்டித் தொகுதி மற்றும் மாகாணத்தினைக் குறிப்பிடுதல் வேண்டும் | |

**போட்டியில் கலந்துகொள்வதற்காக பதிவு செய்வதற்கும் ஆக்கங்களை அனுப்புவதற்கும் உபயோகிக்க வேண்டிய முகவரி**

**பணிப்பாளர்**
**தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பக் கிளை**
**கல்வி அமைச்சு**
**"இசுருபாய"**
**பத்தரமுல்ல**

**(D) பொது விடயங்கள்**

I. பாடசாலைகளை அறிவுறுத்தல் – ஒவ்வொரு வருடமும் ஜூன் மாதம் வரை

இணைப்பு 01,02 மற்றும் 03 இல் குறிப்பிடப்பட்டுள்ள சகல போட்டிகளுக்குமான பதிவு செய்தல் மற்றும் ஆக்கங்களை முன்வைத்தலானது குறிப்பிடப்பட்டுள்ள இறுதித் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் மேற்கொள்ளப்படவேண்டும்.

II. அதன்படி குறித்த திகதியில் கிடைக்கப்பெறாத விண்ணப்பப் படிவங்கள் அனைத்தும் நிராகரிக்கப்படும். போட்டி மதிப்பீடு – மேற்கூறப்பட்ட சகல போட்டிகளினதும் மதிப்பீடானது கொழும்பு பல்கலைக்கழகத்தின் கணணிக் கல்விப் பிரிவினால் மேற்கொள்ளப்படும். (நடுவர் குழாமின் முடிவு இறுதி முடிவாகும்.) தேசிய மட்ட சான்றிதழ்கள் வழங்கும் நிகழ்வு நடைபெறும் திகதி பற்றி அவ் அவ் வருடங்களில் அறிவிக்கப்படவுள்ளது.

III. 10/2020 இலக்கமுடைய சுற்றுநிருபத்தின் 04ம் பந்தியில் குறிப்பிட்டுள்ள விடயம் தொடர்பாக கவனம் செலுத்தப்படுதல் வேண்டும் என்பதுடன் இப்போட்டி நிகழ்வில் ஆசிரியர்கள், ஆசிரிய மாணவர்கள் மற்றும் மாணவர்களை பங்குபற்றச் செய்வதற்குத் தேவையான ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறு தயவுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.